**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY BY M/S. M.S.M. MINING, S.F.NO.217/2, 217/3, 217/5, 217/7, 224/1A1, 252/4A1, 252/4B1, 252/5A2A, 252/5A2B, 252/5A2C, 252/5A3A, 252/5A4A, 252/5A4B, 252/5A4C, 252/5B, 252/11A, 252/11B, 252/11C, 252/11D, 252/11E, 252/11F, 252/11G, 252/11H & 252/12A, OVER AN EXTENT OF – 2.78.50 HECTARES @ PAZHAVERI VILLAGE, UTHIRAMERUR TALUK, KANCHEEPURAM DISTRICT ON 21.11.2024 @ 1.00 P.M.**

| | |
|---|---|
| **Name of Project:** | Proposed Rough Stone and Gravel Quarry of **M/s. M.S.M. Mining,** S.F.No.217/2, 217/3, 217/5, 217/7, 224/1A1, 252/4A1, 252/4B1, 252/5A2A, 252/5A2B, 252/5A2C, 252/5A3A, 252/5A4A, 252/5A4B, 252/5A4C, 252/5B, 252/11A, 252/11B, 252/11C, 252/11D, 252/11E, 252/11F, 252/11G, 252/11H & 252/12A, over an extent of – 2.78.50 Hectares, Pazhaveri Village, Uthiramerur Taluk, Kancheepuram District. |
| **Venue:** | M/s. R. R. K. Mahal,<br>No.167- Thirumukoodal,<br>Thirumukoodal – Pinaiyur Road,<br>Uthiramerur Taluk,<br>Kancheepuram District. |
| **Date and Time:** | 21.11.2024 & 1:00 P.M |
| **Participants:** | 1. Mr. K. Rama Moorthy,<br>District Revenue Officer(L.A),<br>National Highway,<br>Kanchipuram District.<br>2. Er.K.Prakash,<br>District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur,<br>Kancheepuram District.<br>3. Dr. S. Vediappan,<br>Deputy Director,<br>Department of Geology and Mining,<br>Kancheepuram. |

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Sriperumbudur welcomed the District Revenue Officer, Kancheepuram District, other Government Officials, Publics, Social & Environmental activists for the Public Hearing and informed that the proposed stone and gravel quarry of M/s. M.S.M. Mining, S.F.No.217/2, 217/3, 217/5, 217/7, 224/1A1, 252/4A1, 252/4B1, 252/5A2A, 252/5A2B, 252/5A2C,

252/5A3A, 252/5A4A, 252/5A4B, 252/5A4C, 252/5B, 252/11A, 252/11B, 252/11C, 252/11D, 252/11E, 252/11F, 252/11G, 252/11H & 252/12A, over an extent of – 2.78.50 Hectares, Pazhaveri Village, Uthiramerur Taluk, Kancheepuram District have approached State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance for the proposed rough stone and gravel quarry. In this regard, SEIAA-TN has issued Terms of Reference (TOR) subject to one of the condition that Public Hearing shall be conducted and address the concerns raised during the public hearing to SEIAA-TN.Based on that, the public hearing was arranged today 21.11.2024 and public notice have been published as mandated in the newspaper namely **"Dinamalar & Time of India"** on 11.10.2024.

On behalf of project proponents the Project Consultant will make presentation about the said proposed projects. After that the public present here can express their views, concerns and questions if any by indicating their name and village name from where he /she belongs to and the same will be recorded.

The Project consultant Thiru. S.Gopalakrishnan explained in details about the proposed project through a power point presentation.

The views, concerns and questions of the public and the clarification from the project proponent are detailed below.

| S.No | Name and Village | Comments and requests |
|---|---|---|
| 1. | **Mr. Vignesh, Salavakkam Vadakku Onriyam, Tamilaga Vetri Kazagam Pazaveri.** | They are common people gathered here don't know the purpose of gathering. They said that they got proper approval. Whether blasting is done with only the recommended explosives. I am the one most affected among the people here, because my house is so close to the quarry site. My house is vibrating. whether the proper watering is used? Please ask the owners. The report says that residents of Pazavaveri will be given preference for 14% of job openings, but no one from pazaveri is employed at MSM Quarry. We know there is no way to resolve the stone quarry, and we will keep protesting even if we were unable to stop more quarrying operations. The establishment of quarry is acceptable, but only the people who live in the village of Pazaveri must be preferred and give assurance. The next generation of the native population's will suffer. During blasting at a quarry, intense vibration is observed in my house. The festival financial support is not a major concern which is more significant than the lives of those living nearby. We were facing difficulties since we opposed then. we do not oppose to it, If they operate the stone quarry in accordance with regulations. |

| | | |
|---|---|---|
| | | The quarries do not follow regulations during blasting, which is a prerequisite for blasting. Blasting should be done only after clearance which is not followed here. If you clearly mention that this village is meant for only quarry, then I will sell my properties and move on to other village. Run the quarry as per norms. Kindly ask the proprietors how many inhabitants of Pazaveri Village are favored to work in the quarry there. Only if locals are favored to work in the quarry the permission should be granted; if not, we will keep protesting. |
| 2. | **Mr. Rajendiran, Pazaveri** | Welcome to all, I am farmer and I have been impacted for the past ten years by the quarry, which is very close to my property. Everything has been destroyed for the previous five years since MSM took control of the quarry. I am unable to do farming. I am unable to survivie with my cattles. Fake agreement is made for my land, since I denied it I was escaped. Pazaveri village does not require a stone quarry. I strongly disagree with the proposal for this stone quarry since there is no protection, there are no sign boards surrounding the quarry, and MSM quarry is operating illegally. I conclude hereby objecting the stone quarry proposal. |
| | District Environmental Engineer, requested the MSM Quarry to reply for the above problem.<br><br>The proponent responded that the maximum number of employees worked in the quarry is pazaveri locals. We will continue to provide employment to the residents of pazaveri people | |
| 3. | **Mr. Manavalan, Pazaveri.** | My property, which is 1 acre and 66 cents, is next to MSM Quarry. Thirty cents of the land has already been ruined by ultra-tech quarry. Recently , the tahsildhar and a team of authorities visited and said there are only stones up to one acre and thirty cents. I own 25 cents of land on survey number 253, survey number 254 has now been selected for quarrying. How permission will be given. The MSM quarry had devastated all of the agricultural lands. It is not appropriate to grant permission for this stone quarry. They live in a wealthy manner and how we are supposed to live by selling our land? |

| | | |
|---|---|---|
| 4. | **Mr. Venkatesan, Pinayur** | I've frequently saying no quarries should be allowed. Everyone saying quarry is located at my village and my village people should be preferred for employment. We don't have stone quarry but we use the same path by which quarry lorries transporting quarried materials. if any accident occurs due to quarry lorries, the owner of the quarry should give the afflicted person or family Rs. 1 crore. Assurance to be given by them for this. Stone Quarry owners must provide information about which lorry vehicles belongs to which quarry, with the vehicle's number and data, so that we can get in touch with the owner right away and deliver the information. An information board must be provided. If someone died, Rs. 1 crore shall be compensated, and a guarantee should be provided. |
| 5. | **Mr. Ellapan, Pazaveri** | Both Manavalan and Rajendiran spoiled the village by accepting the stone quarry Pazaveri village is affected by rajendiran and manavalan. We have lived our life but our kids have no place to live. Let the stone quarry may be granted permission and take lives of the people |
| 6. | **Mr. Megavvanan, Pazaveri** | Many opposing the stone quarry, but the landowners want stone quarries. There is nothing wrong with giving approval to the stone quarry. Truck drivers must transport quarried materials correctly so they don't disperse across the roadways. |
| 7. | **Mr. Haridass, Pazaveri** | In Pazaveri village, there are currently four stone quarries operating. Government officials conduct meetings only during approval stage but nobody speaks about any structural formalities. It is also not properly regulated about, how much extent a quarrying operation can be conducted. Kanchipuram district's Uthiramerur taluk has numerous stone quarries. The MSM quarry already exists, and a new one is set to be established soon. Regarding the careless rash driving of quarry lorries and there is lack of an appropriate speed breakers. These quarry lorries passing through pazaveri panchayat roads. Many accident keeps on occurring. No action taken against this. The venue for this gathering is a mahal. How many residents are from the village of Pazaveri? If you want to hear from the local villagers, this meeting should be held close to the panchayat office to understand their |

| | | |
|---|---|---|
| | | situation. Public is most affected here. This route is used by farmers and schoolchildren. No appropriate response is received, even when truck drivers are advised to keep the pathway clear. Also, the government bus does not run correctly at regular times so we filed complaints about the incorrect bus schedules. It is well known that the local population will be impacted by the approval of the stone quarry. Nobody is concerned about death caused by quarry trucks. Therefore, in Kancheepuram district's Uthiramerur taluk, stone quarries should be avoided at all costs. Particularly in uthiramerur taluk existing quarries should be closed and no more new quarries should be granted permission. |
| 8. | **Mr. Sivakumar, Arunkundram** | We keep saying that the residents of Pazaveri and Sirimailoor doesn't need quarries. There are many disputes among farmers as a result of these stone quarries. Public transportation delays and accidents are caused by stone quarries. Why is it necessary to have stone quarries in our hamlet, even if we don't request them? What advantages does a stone quarry offer? It is advantageous only when it does not cause harm. Because of the quarry trucks, our village does not have proper timing for buses or ambulances. Has there been any research done by government official regarding dust settling in our village?. Please consider this. We don't require any quarries because this particular area is completely destroyed and turned into graveyard. In Uthiramerur Taluk, no new stone quarries should be permitted. |
| 9. | **Mr. Balamurugan, Pazaveri village** | Numerous fatalities have already been caused due to stone quarries. About 500 meters from the community, we had a lot of issues five years ago and we also protested. We were adamantly opposed to the operation of stone quarries, and even after five years, other new quarries are receiving approval. I don't know on what basis this meeting is conducted. The operation of the stone quarry can't be confirmed with 20 village residents. Our community lacks adequate transportation for school childrens. Traveling is really challenging, even when riding a bicycle is difficult here. The government school in Uthiramerur does not have adequate transportation. Only one government school is |

| | | |
|---|---|---|
| | | located in uthiramerur for upto 10th standards. There is no adequate water sprinkling available. Within a year, a road that was constructed between Pinayur to Pazaveri was damaged due to Poor quality. Government regulations must be followed by existing quarries, and no new stone quarries should be allowed. |
| 10. | **Mr. Ramesh, Madhur** | Crusher trucks passes through my patta land. At first, I gave a small area for travel, but now it is completely covered with dust and stones. Now, I am unable to harvest. Following the filing of numerous petitions with the collectorate, I was imprisoned three times for filing petitions. For the past ten years, I have not planted any crops. |

With the above comments, no one has turned up for sharing their views and hence the public hearing meeting was concluded with thanks to the District Revenue Officer, Kancheepuram District, Officials, Public and NGO's. It was informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai.

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the Public hearing meeting are enclosed herewith.

**District Environmental Engineer,**
**TNPCB, Sriperumbudur,**
**Kancheepuram District**

**Competent Authority/**
**District Revenue Officer (L.A),**
**National Highway, Kanchipuram**
**Kanchipuram District.**

**காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பழவேரி கிராமம், புல எண். 217/2, 217/3, 217/5, 217/7, 224/1A1, 252/4A1, 252/4B1, 252/5A2A, 252/5A2B, 252/5A2C, 252/5A3A, 252/5A4A, 252/5A4B, 252/5A4C, 252/5B, 252/11A, 252/11B, 252/11C, 252/11D, 252/11E, 252/11F, 252/11G, 252/11H & 252/12A–ல் 2.78.50 ஹெக்டர் பரப்பளவில், அமையவுள்ள தி/ள். எம். எஸ். எம் மைனிங் என்கின்ற சாதாரன கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 21.11.2024 அன்று காலை 1.00 மணியளவில் தி/ள். R.R.K மண்டபம், திருமுக்கூடல், உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர் :**

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்** | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பழவேரி கிராமம், புல எண். 217/2, 217/3, 217/5, 217/7, 224/1A1, 252/4A1, 252/4B1, 252/5A2A, 252/5A2B, 252/5A2C, 252/5A3A, 252/5A4A, 252/5A4B, 252/5A4C, 252/5B, 252/11A, 252/11B, 252/11C, 252/11D, 252/11E, 252/11F, 252/11G, 252/11H & 252/12A–ல் 2.78.50 ஹெக்டர் பரப்பளவில், அமையவுள்ள **தி/ள். எம். எஸ். எம் மைனிங் என்கின்ற சாதாரன கல் மற்றும் கிராவல் குவாரி** |
| **இடம்** | தி/ள். R.R.K மண்டபம், எண்.167, திருமுக்கூடல், திருமுக்கூடல்– பினையூர் சாலை, உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம்.. |
| **நாள் மற்றும் நேரம்** | 21.11.2024 நேரம் மாலை 1.00 மணி |
| **பங்குபெற்றோர்** | 1. திரு. இராமமூர்த்தி<br>தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலை, காஞ்சிபுரம் மாவட்டம்.<br>2. திரு. கு. பிரகாஷ்,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.<br>3. முனைவர் சு. வேடியப்பன், துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை, காஞ்சிபுரம் மாவட்டம்<br><br>மற்றும் பொதுமக்கள் |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள், இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்த வருகை தந்துள்ள தனி மாவட்ட வருவாய் அலுவலர்,(நி.எ), காஞ்சிபுரம் மாவட்டம், அவர்களையும் மற்றும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பழவேரி கிராமம், புல எண். 217/2, 217/3, 217/5, 217/7, 224/1A1, 252/4A1, 252/4B1, 252/5A2A, 252/5A2B, 252/5A2C, 252/5A3A, 252/5A4A, 252/5A4B, 252/5A4C, 252/5B, 252/11A, 252/11B, 252/11C, 252/11D,

252/11E, 252/11F, 252/11G, 252/11H & 252/12A–ல், 2.78.50 ஹெக்டர் பரப்பளவில், **தி/ள். எம். எஸ். எம் மைனிங்** அமைவதற்கு சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தில் விண்ணப்பித்து TOR (Terms of Reference) என்கின்ற வரையறைகளை பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுவின் 29.07.2024 தேதியிட்ட குறிப்பு விதிமுறை கடிதத்தின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அதற்கான அறிவிப்பு 11.10.2024 அன்று "**தினமலர்**" என்கின்ற தமிழ் நாளிதழிலும் மற்றும் "**தி நியூ இந்நியன் எக்ஸ்பிரஸ்**" என்ற ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டு இன்று 21.11.2024 இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்கள் மற்றும் அதனை சார்ந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்து இத்திட்ட ஆலோசகர் **திரு. S.கோபாலகிருஷ்ணன்., எம்.எஸ்சி., எம்.பில்**, பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களிடம் இந்த திட்டத்தைப் பற்றி தங்களது கருத்துக்கள் கேள்விகள், விளக்கங்கள் ஏதும் தேவையிருப்பின் அமைதியான முறையில் தங்களது பெயரையும் ஊரையும் குறிப்பிட்டு தெரியப்படுத்தலாம் என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தாங்கள் கூறுகின்ற அனைத்து கருத்துக்களும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்படும் எனவும், எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கருத்துக்களை மனுவாகவும் கொடுக்கலாம் என கூறினார். இதை தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

**<u>பொதுமக்களின் கருத்துக்கள் பின்வருமாறு:</u>**

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | கருத்து மற்றும் கோரிக்கைகள் |
|---|---|---|
| 1 | **திரு. விக்னேஷ் , பழவேரி கிராமம்:** | இவர்கள் அடித்தள மக்கள் இவர்கள் கிட்ட சொன்னால் என்ன ஆகும், இங்குள்ள அதிகாரிகளிடம் சொன்னால் தான் கோரிக்கைகள் நிறைவேறும். முறையான அனுமதி வாங்கி தான் செய்கிறோம் என சொல்கிறார்கள். நீங்களே சொல்லுங்கள் பழவேரி கிராமத்தில் நாணல் வேட்டு வெடிக்கிறாங்களா அல்லது போர் வேட்டு வெடிக்கிறாங்களா. முறையாக ஆரஞ்சு கலர் நாணல் கட்டி வேட்டு வெடிப்பதே கிடையாது. என்னுடைய வீடுதான் அதிர்கிறது. என்னுடைய வீடு தான் முதலில் இருக்கிறது. ஒரு நாளைக்கு 8 முறை தண்ணீர் ஊற்றுகிறேன் என சொல்கிறார்கள். ஆனால், ஒரு முறையாவது தண்ணீர் ஊற்றுகிறார்களா? இந்த எம் எஸ் எம் குவாரியை கேளுங்கள். 14% வேலை வாய்ப்பு பழவேரி கிராமம் மக்கள் அதாவது உள்ளூர் மக்களுக்கு வழங்கப்படும் என ஒரு அறிக்கை கொடுக்கிறார்கள். அதில் 50 மக்கள் மறைமுகமாக வேலை செய்யப்படும் என அறிக்கை கொடுத்தார்கள். 14 பேரு யாரு பழவேரி கிராமத்தில் வேலை செய்கிறார்கள். ஒருத்தர் கூட வேலை செய்யவில்லை. |

| | | |
|---|---|---|
| | | குவாரியை நாங்கள் என்ன போராடினாலும் தடுக்கமுடியாது. நாங்கள் போராடணும் பணக்காரன், ஏழையை வைத்து பேசினாலும் எதுவும் நடக்க போவது இல்லை. கடைசி வரைக்கும் நாங்கள் போராடி கொண்டு தான் இருக்க வேண்டும். ஏற்கனவே போராட்டம் செய்தோம் எந்த நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை. குவாரியை நடத்துங்கள் ஆனால் அங்கு வேலை செய்பர்கள் அனைவரும் பழவேரி உள்ளூர் மக்கள் தான் இருக்க வேண்டும், நீங்கள் தான் நல்ல தீர்வு ஒன்று கொண்டுவரனும் நீங்கள் தான் பார்த்து பக்குவமாக அதற்கான வழிகளை முறைப்படி கடைப்பிடியுங்கள். நானும் இதே குவாரி துறையில் வேலை செய்திருக்கிறேன். அன்றைக்கு நாங்கள் நாங்கள் வேறு ஒரு குவாரியை எதிர்த்து போராடினோம் அதனால தான் எங்க ஊர் மக்கள் எவ்வளவோ பேர் பிழைத்து, வேலை தெரிஞ்சிகிட்டு வெளிய போய் வேலை செய்திருப்போம் அன்றைக்கு எதிர்த்ததுனால தான் எங்களுக்கு இவ்வளவு பிரச்சனை. நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை முறைப்படி நடத்த சொல்லுகிறோம். ஊர் மக்கள் வந்தால் மரியாதை கொடுத்து பேசுறீங்களா, நானே பலமுறை வந்து பேசியிருக்கிறேன் இந்த மாதிரி செய்யாதீர்கள் தண்ணீர் ஊற்றுங்கள், வேட்டு இந்த மாதிரி வெடியுங்கள், நான் ஏற்கனவே கவனிச்சிருக்கிறேன். மக்கர்பெட்டி பக்கத்துல ஒரே ஒரு ஆள் தான் இருக்கிறார்கள். பிளாஸ்டிங்கு முறைப்படி பார்த்தா நாலு பக்கமும் ஆள் Clearanceக்கு போகனும், Clearanceக்கு போனால் மட்டும் தான் வேட்டு பிளாஸ்டிங் பண்ணனும். Clearanceக்கு யாரும் போறது இல்லை. முறைப்படி ஒரு குவாரியை கொடுக்கறதா இருந்த கொடுங்கள், இல்லையென்றால் நீங்கள் சொல்லிடுங்கள் இங்க பழவேரி கிராமத்தில் குவாரி மட்டும் தான். நாங்கள் எங்களுடைய சொத்து எல்லாம் வித்துட்டு வேற ஒரு ஊருக்கு போய்விடுவோம். எங்களால இங்க போராடிக்கொண்டு இருக்க முடியாது எங்களுக்கும் குடும்பம் குழந்தை இருக்கு. |
| 2 | திரு.G. ராஜேந்திரன், பழவேரி கிராமம்: | அனைவருக்கும் வணக்கம்,<br>நான் பழவேரி G.ராஜேந்திரன், விவசாயி, பத்து வருடமாக கல்குவாரியால் பாதிக்கப்பட்டது என்னுடைய நிலம், அருகாமையில் அல்ட்ரா டெக் குவாரி நடத்தினார்கள் இப்பொழுது எம்.எஸ்.எம் மைனிங் நிறுவனம் செய்து கொண்டு உள்ளார்கள். இப்பொழுது 5 வருடமாக மொத்தமாக அழிச்சிட்டாங்க, ஒன்றும் கிடையாது. |

| | | |
|---|---|---|
| | | போலீஸ்ல கம்ப்பெலைண்ட் கொடுத்தும் ஒன்றும் நடக்கவில்லை. இப்படி பல விதமான தொந்தரவுகள் கொடுக்கிறார்கள். பலவிதத்திலும் என்னால் விவசாயம் செய்ய முடியவில்லை. ஆடு மாடுகள் வைத்து பிழைக்க முடியவில்லை. நிலத்திற்கே திருட்டு அக்ரிமெண்ட் போட்டாங்க உன் நிலத்தையே வாங்கிக்கொள்கிறேன் அப்படி என்று அந்த அக்ரிமெண்ட் கொடுக்காததால நான் தப்பித்தேன். ஆகையால பழவேரிக்கு கல்குவாரியே தேவையில்லை எந்த பாதுகாப்பும் கிடையாது. இன்றைக்கும் போய் பாருங்கள் குவாரியை சுற்றி எந்த பாதுகாப்பும் கிடையாது. போர்டு கிடையாது, ஒன்றும் கிடையாது. திருட்டுத்தனம் பன்ற குவாரி இந்த எம்எஸ்எம் குவாரி. இந்த குவாரி நடக்க கூடாது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். |
| 3 | **குவாரியின் உரிமையாளர்:** | இங்கே உட்கார்ந்திருக்கின்ற நிறைய பேர் பழவேரி தொழிளாலர்கள் தான். மேலும் இந்த ஊருக்கு தேவையான அவர்கள் கோரிக்கையை நாங்கள் நிறைவேற்றுகிறோம். அவர்கள் வேலை கேட்கிறார்கள் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறோம் அதில் ஒன்றும் தப்பு கிடையாது. அவர்கள் கோரிக்கையை நாங்கள் நிறைவேற்றுவோம். |
| 4 | **திரு. மணவாளன், பழவேரி கிராமம்:** | சார் நான் மணவாளன், பழவேரி முன்னால் ஊராட்சி மன்ற தலைவர். எங்களுடைய நிலம் 1ஏக்கர் 66 செண்ட் எம்எஸ்எம் மைனிங் குவாரிக்கு பக்கத்தில் இருக்கிறது. ஏற்கனவே அல்ட்ரா டெக் குவாரி ஆரம்பித்தார்கள் 1ஏக்கர் 30 செண்ட் நிலம் சுத்தாமாக கல்லும் குழியுமாக நாசமாகி விட்டார்கள். அதற்கு அப்புறம் இந்த தைலம் மரம் வைத்தோம் இந்த எம்எஸ்எம் குவாரி வந்து ஏதோ ஒப்புக்கு பேச்சு வார்த்தை நடத்தி சுத்தமா மலை போல கல் ஆகிவிட்டது. அந்த 1 ஏக்கர் 30 செண்ட் முழுவதும் பாறை தான். தாசில்தார் வந்து பார்த்தார் எல்லாரும் வந்தார்கள் பார்த்துட்டு இது ஒரு மலை என்று சொல்லிட்டு பொய்ட்டாங்க அந்ந அளவுக்கு ஆகிவிட்டது அந்த விவசாய நிலம். இப்போ பத்தாததுக்கு சர்வே எண் 254 க்கு குவாரிக்கு நடத்த அனுமதி கொடுக்கிறீர்கள். பக்கத்தில் சர்வே எண் 253 என்னுடைய 25 செண்ட் நிலம் இருக்கு எப்படி நீங்க அதிகாரிகள் அனுமதி கொடுக்குறிங்க<br>**(மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பேசினார்** ஐயா அதற்கு இன்னும் அனுமதி கொடுக்கவில்லை)<br>எங்களுடைய நிலம் இருக்கிறது ஐயா எல்லாத்தையும் இந்த எம்எஸ்எம் குவாரி வந்து அழிச்சிட்டாங்க |

| | | |
|---|---|---|
| | | பத்தாததுக்கு 25 சென்ட்யும் கண்டுக்கவே இல்லை. இப்ப 5 அடி தூரம் அளந்து பில்லர் போட்டுடாங்க. ஆகையால் இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்க கூடாது எங்களுடைய அனுமதி கேட்டுட்டு தான் கொடுக்கனும் என்று ஏற்கனவே கோரிக்கை தபால் கொடுத்துட்டோம்.<br>**(மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பேசினார்** உங்களுடைய கோரிக்கைகளும் உங்களுடைய பெட்டிஷனும் மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். அனுமதி கொடுக்கலாமா இல்லை வேண்டாமா என அவர்கள் முடிவு எடுப்பார்கள்) |
| 5 | **வெங்கடேசன்: (பினாயூர் கிராமம்)** | மீண்டும் மீண்டும் நான் வந்து கல்குவாரிக்கு அனுமதி கொடுக்க கூடாது என்று சொல்கிறேன். அப்புறம் இந்த லாரிகளை பற்றி பேச வந்திருக்கிறேன். எல்லோரும் வந்து என்னுடைய ஊரில் கல்குவாரி இருக்கு அதனால் ஊர் ஆட்களுக்கு வேலை தர வேண்டும் என்று சொல்கிறார்கள், எங்க ஊர்ல கல் குவாரி இல்லை. போக்குவரத்துக்கு எங்கள் கிராமத்து மக்களுக்கு அது வழியாக அப்படி தான் போகனும். பொதுவாக லாரியால் யாருக்கு விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு நேர்ந்தாலும் அந்த லாரி கல் குவாரி உரிமையாளர் 1 கோடி ரூபாய் அந்த குடும்பத்திற்கு கொடுக்க வேண்டும் என உத்தரவாதம் தர வேண்டும். எந்தெந்த லாரி எந்தெந்த கல் குவாரியில் கல் எடுக்குறாங்க என்ற விவரம் தர வேண்டும். அதற்காக போர்டு ஒன்று தகவல் பலகை வைக்க வேண்டும். தொலைபேசி நம்பருடன் வைக்க வேண்டும். ஏன் என்று கேட்டால் அந்த நம்பர் வைத்து நாங்கள் உடனடியாக அந்த கல்குவாரிக்கு தகவல் கொடுப்போம் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். |
| 6 | **திரு.எல்லப்பன், பழவேரி கிராமம்:** | இதே ராஜேந்திரன் என்பவரும் மற்றும் மணவாளன் என்பவரும் கல்குவாரியை விற்று கையெழுத்து போட்டவர்கள் ஊரை கெடுத்தவர்களே அவர்கள் தான், அவங்களே தான் அந்த கல்குவாரியால் காசு வாங்கி சாப்பிடுபவர்களும் அவர்கள் தான். இன்றைக்கு ராஜேந்திரன் பேசுறாரே அவரே தான் அவர் நிலத்தில் கல் விழுந்தது என்று பணம் வாங்கியவர். எங்கள் ஊரில் கல்குவாரி இல்லாமல் இருந்தது. கல்குவாரி வருவதற்கு காரணமானவர்கள் அவர்கள் தான். கல் குவாரி வரட்டும்எல்லோரும் இறந்து போகிறோம் என்ன இப்போ அதனால எங்களால் என்ன பண்ண முடியும். இத்துடன் என் உறையை முடித்துக்கொள்கிறேன். |

| | | |
|---|---|---|
| 7 | **திரு. மேகவாணன், பழவேரி கிராமம்:** | இப்பொழுது கல்குவாரி கொடுக்க வேண்டாம் என சொல்றாங்க, ஆனால் நிலம் விற்பவர்கள் கல்குவாரிக்கு தான் இடம் கொடுப்பேன் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் கல்குவாரிக்கு விற்றால் 2000 ரூபாய்க்கு போற நிலம் இப்போ 40000, 45000 க்கு போகின்றது. அதனால் கல்குவாரிக்கு மட்டும் கொடுக்குறாங்க இப்போ. இடம் வாங்குனவங்க என்ன பன்னுவாங்க கல்குவாரி நடத்த தான் செய்வாங்க. அதனால் கல்குவாரிக்கு அனுமதி கொடுக்க எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை, கொடுக்கலாம். மேலும் லாரியில் ஜல்லி கற்கள் கொண்டு செல்லும் போது சாலையில் விழாமல் எடுத்துச் செல்ல வேண்டும் ஏனென்றால் பின்னாடி வருபவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. |
| 8 | **திரு. ஹரிதாஸ், பழவேரி கிராமம்** | பழவேரியில் இதுவரைக்கும் 4 குவாரிகள் தொடர்ந்து இயங்கிவருகிறது. முதலில் பார்த்த ஜே.கே. கல்குவாரி அடுத்து எம்எஸ்எம் கல்குவாரி. கல்குவாரி வைக்க மட்டும் முறையாக அரசு அதிகாரிகள் உட்பட மாவட்ட ஆட்சியர் ஒப்புதலுடன் மட்டும் மக்களை அழைத்து பேசுற ஏற்பாடு இருக்கிறது. ஆனால் அதற்கு உண்டான கட்டமைப்பு சொல்றதுக்கு மட்டும் எந்த அதிகாரியும் தயாராக இல்லை. காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தாலுக்காவில் மட்டும் எண்ணிக்கையற்ற கல்குவாரிகள் நிறைந்து காணப்படுகிறது இது தான் வரலாறு. இப்ப மறுபடியும் ஒன்று கொண்டு வருகிறீர்கள். இந்த லாரிகள் போகிறது தொடர்ந்து நாங்கள் பேசிக்கொண்டு தான் இருக்கிறோம். தொடர்ந்து மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களுக்கு மனு கொடுத்து இருக்கிறோம். எந்த வேக கட்டுப்பாடும் இல்லாமல் லாரிகள் இயங்குவதால் அதிகப்படியான விபத்துக்கள் ஏற்படுகிறது. லாரிகளின் ஓட்டுநர்கள் கட்டுப்பாடுயின்றி லாரிகளை ஓட்டுகிறார்கள். மாதத்திற்கு ஒரு முறை தாசில்தார் மாறி கொண்டு இருக்கிறார்கள் யாரும் எந்த நடவடிக்கையும் எடுப்பது இல்லை. கல்குவாரியை மட்டும் அனுமதிக்க வேண்டும் என இன்று கோரிக்கை வைக்கிறீங்க, அதை எங்கு வைக்க வேண்டும். 3 குவாரிகளை சேர்த்து கூட்டம் நடத்துறாங்க, இதில் எத்தனை பேர் பழவேரி கிராம மக்கள் இருக்கிறார்கள் எண்ணி பாருங்கள். ஊராட்சி அனுமதி வாங்க வேண்டும் என்றால் ஊரில் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் வைக்க வேண்டும். அந்த ஊர் மக்களின் ஆதரவு, என்ன நிலைமை, என்ன நிலைமையில் இருக்கிறார்கள்,இந்த ஊராட்சியில் என்ன கட்டுபாட்டில் இருக்கிறாங்க, அவர்கள் அனுமதி |

| | | |
|---|---|---|
| | | கேட்க வேண்டும். யாரும் இல்லை ஒட்டு மொத்தமாக வந்து பேசினால் இது எப்படி சாத்தியம் ஆகும். அதேபோல் பார்த்தால் பொது மக்களுக்கு தான் பாதிப்பு, பள்ளி மாணவர்கள், விவசாயிகள் எல்லோரும் தினமும் அந்த சாலையில் தான் போகிறோம். அருங்குன்றம் கல்குவாரி அவர்களிடம் சொன்னால் எங்களுடைய லாரி மட்டுமா போகிறது எல்லாம் லாரிகளும் தான் போகிறது அப்படி என்று சொல்கிறார்கள். நாங்கள் யாரிடம் போய் முறையிடுவது. சாலை முழுவதும் பள்ளம் மேடாக இருக்கிறது. ஆகையால் கல்குவாரி வருவதால் பொதுமக்களுக்கு பெரிய பாதிப்பு. காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தாலுக்கா கல்குவாரிகள் தவிர்க்கப்பட வேண்டும். குறிப்பாக பழவேரி கிராமத்தில் இருக்கும் கல்குவாரிகள் இழுத்து மூடப்பட வேண்டும். புதிதாக வரவிருக்கும் கல்குவாரிகளும் வர கூடாது. நன்றி வணக்கம். |
| 9 | **திரு. சிவக்குமார், அருங்குன்றம்:** | நான் தொடர்ச்சியாக சொல்கிறேன் பழவேரி, சிறுமைலூர் எந்த ஊருக்கும் கல்குவாரியை கொண்டுவராதிங்க. இதனால் எவ்வளவு பிச்சனைகள் விவசாயிகளே அடித்துக்கொள்கிறார்கள், விவசாயி பக்கத்து பக்கத்து நிலத்துக்காரர்கள் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். இந்த பிரச்சனைக்கு காரணம் என்ன கல்குவாரி தான். விபத்து, ஆடு, மாடு, விவசாயம் மற்றும் பேருந்து துண்டிப்புக்கு இப்படி எல்லாவற்றிற்க்கும் கல்குவாரி தான் காரணம். அப்படிப்பட்ட கல்குவாரி எதுக்கு எங்களுக்கு. கல்குவாரியே தேவையில்லை. அதனால் என்ன பயன் இருக்கு சொல்லுங்கள். விவசாயம் அழியுது, மனிதனே அழிஞ்சி போகிறான். கர்ப்பினி பெண்களுக்கு ஒரு ஆம்புலன்ஸ் வர முடியவில்லை. பேருந்து வர முடியவில்லை. படிக்கிற மாணவ/மாணவிகள் உடுத்தும் உடை அழுக்காக மாறிவிடுகிறது. அப்போ எந்த நிலையில் அதிகாரிகள் வேலை பார்க்கிறார்கள். ஒரு அதிகாரியாவது வந்து ஆய்வு செய்கிறார்களா? எங்கெங்கே தூசு படியுது என்று பார்க்கிறாகளா? தெளிவா சொல்ல சொல்லுங்கள் பார்க்கலாம். எவ்வளவு தூசு கண்கள் என்ன இரும்பிலா செய்து வைச்சிருக்காங்க இதயம் இரும்பிலா செய்து வைச்சிருக்காங்க சொல்லுங்க. கொஞ்சமாவது யோசிக்கனும் அங்களும் மனிதன் தான் நம்மளும் மனிதன் தான் என்று. இதை நினைவில் வைத்து அராங்கத்திற்கு வலியுறுத்தி நீங்களும் வந்து மக்கள் இந்த மாதிரி சொல்கிறார்கள் கல்குவாரியை நிறுத்த சொல்கிறார்கள் அப்படி என்று நீங்கள் சொல்லுங்கள். |

| | | |
|---|---|---|
| | | மறுபடியும் மறுபடியும் நாங்கள் சொல்கிறோம் இந்த பகுதியே அழிஞ்சி போச்சி அதனால் எங்களுக்கு குவாரி வேண்டாம். என்னுடைய கருத்தை இந்த அருங்குன்றம் சார்பாக சொல்கிறேன் உத்திரமேரூர் தொகுதியில் கல்குவாரி கொண்டு வராதீர்கள். |
| 10 | **திரு. பாலமுருகன், பழவேரி கிராமம் :** | எங்கள் ஊரில் ஏற்கனவே 4 கல்குவாரி இயங்கி கொண்டு இருக்கிறது. எங்கள் ஊருக்கு பக்கத்தில் 500 மீட்டர் இடையில் 5 வருடம் முன்னாடி பல பிரச்சனைகளை நாங்கள் சந்தித்து இருக்கிறோம். அந்த பிரச்சனையில் பல பேர் போராட்டம் செய்து இருக்கிறோம். கல்குவாரியை நாங்கள் முழுமையாக எதிர்க்கிறோம். ஆனாலும் எவ்வளவோ எதிர்ப்புக்கு பிறகும் 5 வருடமாக இயங்கி கொண்டு தான் இருக்கிறது. இப்பொழுது மறுபடியும் புதிதாக கல்குவாரிக்கு எதனடிப்படையில் இந்த கூட்டம் நடத்தப்படுகிறது என்று எனக்கு தெரியவில்லை. கூட்டத்தின் பெயரே மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் என்று சொல்கிறார்கள். மக்களின் கருத்தமைப்பு அடிப்படையில் ஒரு சில கிராமத்திலிருந்து 20 பேர் மட்டுமே முடிவு செய்து விட்டால், நாளைக்கு மக்கள் இவர்கள் தான் முடிவு செய்தார்கள். நான் கருத்து கேட்பு கூட்டம் நடத்தினேன் என்று அதன் அடிப்படையில் எல்லாமே செய்கிறார்கள். அதே மாதிரி எங்கள் ஊரில் பஸ் வசதி மற்றும் மாணவர்கள் பள்ளிக்கு செல்ல வழியே இல்லை. குறுக்கு வழி என்றால் அது அருங்குன்றம் வழி தான். அதையும் மூடி வைத்து விட்டார்கள். பள்ளி கூடத்தில் குழந்தைகளை சேர்க்க மாட்டேன் என்கிறார்கள். இங்கு போக்குவரத்து வசதி இல்லை ரொம்ப கஷ்டப்பட்டு வரவேண்டியுள்ளது வேறு பள்ளியில் சேர்த்து விடுங்கள் என்று கூறுகிறார்கள். அரசு பள்ளி இங்கு ஒன்று தான் இருக்கின்றது. அதையும் மீறி வேறு பள்ளியில் சேர்க்கலாம் என்று பார்த்தால் 8ஆம் வகுப்பு வரை தான் இருக்கின்றது. பஸ் வசதி தடை செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலும் சாலையில் பள்ளம் உள்ளது. அந்த பள்ளத்தை இதுவரைக்கும் மூட வில்லை. இங்கு அதிகபடியான வண்டிகள் போகின்றது. ஒரு சாலைஅமைத்து ஒரு மாதம் தான் ஆகிறது. அதற்குள் சாலை சேதம் ஆகிவிட்டது. அப்போ எந்த அளவுக்கு தரமான சாலை போட்டு இருக்கிறார்கள். அதனால் இருக்கிற கல்குவாரியை செயல்படுத்திவிட்டு, புது கல்குவாரிக்கு அனுமதி வேண்டாம் என்பது என்னுடைய கருத்து, நன்றி. |

| | | |
|---|---|---|
| 11 | திரு.ரமேஷ்,<br>மதூர் கிராமம்: | கிரஷர்க்கு போற வழியே என்னுடைய பட்டா நிலத்தில் தான் போகிறது. மதூர் ஊர் உள்ள போறத்துக்கு என்னுடைய பட்ட நிலம் வழியில் தான் போகிறார்கள். முதலில் கொஞ்சம் இடம் கேட்டார்கள் கொடுத்தேன். ஆனால் அதற்கு அப்புறம் மணலை கொட்டி கொட்டி மேடாக மாற்றிவிட்டார்கள். இப்பொழுது நான் பயிர் வைக்க முடியவில்லை. 10 வருடமாக பயிர் வைக்கவில்லை. நான் கலெக்டருக்கு பல முறை மனு கொடுத்துக்கிறேன். நான் மனு கொடுத்ததால் 2019-லிருந்து 3 முறை என்னை ஜெயிலுக்கு அனுப்பிட்டாங்க. நானும் கோர்ட்டுக்கு போய் இப்போ கேஸ் கோர்ட்டில் இருக்கிறது. இப்படி நான் பேசுவதால் இன்றைக்கு இரவுக்குள் மறுபடியும் என்டை ஜெயிலுக்கு அனுப்பிடுவார்க்ள். அதையும் மீறி கேட்டால் மிரட்டுகிறார்கள்.நன்றி |

இதனையடுத்து பொதுமக்கள் வேறுயாரும் பேசுவதற்கு முன்வராததினால், மாவட்ட வருவாய் அதிகாரி அவர்கள் மேடையில் பொது மக்களிடமிருந்து எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட புகார் மனுக்களை பெற்று கொண்டார். இதைத் தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், அவர்கள் இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமையேற்று நடத்திய மாவட்ட வருவாய் அதிகாரி மற்றும் பொதுமக்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துக்கள் முழுமையாக ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல், தாக்க மப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறி கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்தார்.

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியல் மற்றும் கோரிக்கையாக பெறப்பட்ட புகார் மனுக்கள் இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலை,
காஞ்சிபுரம் மாவட்டம்.